உ

தேவிசகாயம்.

சகலவியாதிகளுக்கும்

பிரமமுனியார் அருளிச்செய்த

மகாசந்தனாதி தயிலம்.

இஃது

தி-படேமீராசாகிபுபண்டிதர்

அனுபோகத்தின்படி

டாக்கர்சத்திரம்

மகா-ள-ள-ஸ்ரீ

பி-ஆண்டியப்பகிராமணியார்

இரும்புலியூர்

அப்பாதுரைமுதலியார்

இவர்களால்

புங்கத்தூர்

ம-சபாபதிமுதலியாரது

கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

துன்மதி ஸூ - மாசி மீ.

தேவிசகாயம்.

நன்றாக - குருவாழ்க - குருவே துணை.

சகலவியாதிகளுக்கும்

பிரமமுனியார் அருளிச்செய்த

மகாசந்தனாதிதயிலம்.

ஒன்றாஞ்செஞ்சந்தனமோடலம்நாறுகும் ....*
உந்துவெட்டிவிலாமிச்சைவில்வம்சங்கம் ... .*
நன்றானநிலப்பனையும் அமுக்குறாவும் ..—.............*
நன்னாரிசாறணைமிளகருணைவேரும் ....*
கன்றானகுருந்தொட்டிபேராமுட்டி... ... .*
காஞ்சொரிதூதுவேளைகாட்டுமல்லி... ... ...*
பண்டானதேற்றான்வேர் அத்திப்பட்டை ....*
பருநெல்லி ஆவிலியப்பட்டைதானே... ....(௧)

பட்டையொடாலம்விழுதுசித்திரமூலம்... ....*
பாலைபாம்பட்டையொடுகுமரிவேரும்... ....*
இட்டமாமிருவேலிவட்டத்திருப்பி......... ....*
தென்னமரப்பாளையொடுவிடத்தேர்வீழி.........*
மொட்டலருப்பசுமின்னைகரியசெம்பை... ....*
முத்தவள்ளிநீர்ப்புலாருந்திரிகைவேரும். . ...*
இட்டமுடனேவகைக்குப்பலந்தானைந்து...... .. ...*
இடித்துமண்தாழியிலேயிட்டுக்கேளே.. .....(௨)

கேளப்பா இருதூணிசலந்தான்வாரு............... ... *
கெடியானசந்தனத்தைத்தாழியிட்டு.........................*
வேளப்பா இருதூணிசலந்தான்வாரு..................*
வெவ்வேறாய்ப்பேற்றிவெட்டொன்றாக்கி ..... *

நாளப்பாகியாழமிரண்டொன்றாய்ச்சேர்த்து.........*
நலமான நல்லெண்ணெய்ப்படிதானெட்டு...........*
ஆளப்பாசெவ்விளநீர்படிநாலும்வெள்................*
ஆவின்பால்படிநாலும்அதிலேவாரோ.............(௩)

வாரோநீசாறுவகைசொல்லக்கேளு.......................*
வல்லாரைகரிசாலைபொன்னாங்காணி..................*
சேரோநீகற்பூரவள்ளியோடு............................*
செருப்படையுமுசுமுசுக்கைமணத்தக்காளி......*
பாரோநீசீதேவிசெங்கழுநீர்ச்சாறு....................*
பருத்திக்காய்நீர்முட்டான்அல்லிகொட்டி...........*
வாரோநீநந்தியாவட்டமோடு...........................*
மல்லிகையுஞ்சிறுகீரைசாறுங்கூட்டே............(௪)

கூட்டடாநீர்மாதளையின்சாறும்.......................*
குமரியுடன்முடக்கத்தான்பற்பாடகம்.............*
நீட்டடாதாழையுடைவிழுதுச்சாறும்.............*
நெல்லிக்காய்ச்சாறுதழுதாழைநொச்சி...........*
ஆட்டடாவெள்ளறுகுபெருநெருஞ்சி..............*
அமிர்தவல்லிச்சீந்திபொடுகாணும்வேளை.........*
வாட்டமில்லாஅவுரிபழம்பாசியோடு.................*
வைத்தவினவகைக்குஅளாபடிதான்சாறே......(௫)

சாறோடுயாழமைவயெல்லாமொன்றாய்..............*
சாரித்துத்தாளியொன்றில்சாற்றக்கேளு..........*
வாறானதிரிகடுகுதிரிபலாதி..........................*
வகையானஏலம்இலவங்கங்கோஷ்டம்.............*
வீறானதாளிசைஓமம்இரண்டும்......................*
விதமானமதுரம்இருசீரகமும்மல்லி.................*
வாறானசாதிக்காய்பத்திரிகிராம்பு...................*
வால்மிளகுசடாமாஞ்சிமஞ்சளாமே............(௬)

மஞ்சளாஞ்செவ்வியஞ்சோப்புஇந்துடச்சை.........*
வாய்விளங்கங்கூகைநீர்வங்காளபச்சை...........*
மஞ்சளாங்கிளிபூரால்கருவாய்ப்பட்டை..........*
மாதினிபகுளவித்தம்பெருங்குரும்பை..............*

மஞ்சளாம்பூலாக்கிழங்குதிப்பிலிமூலம் ... ... *
மஞ்சிட்டி அத்திதிப்பிலிநாகப்பூ......... ... . *
வஞ்சியேவாலுளுவைதகற்கடகச்சிங்கி .... *
வலம்புரிவெட்பாலைகார்போகிவித்தே ....(௭)

வித்தானவெட்பாலை அரிசியோடு......... .... *
விளாவரிசிவகைக்குக்கால்பலமேசொன்னோம்..... *
நத்தானஆவின்பால்தன்னாலாட்டி...... .... *
நலமானஎண்ணெயிலேகரைத்துவாரு .... *
சித்தாகஅடுப்பேற்றிமூன்றுநாள்தான்...... .... *
சிறுகொதியாய்ஆவாரைவிறகால்மூட்டு............ *
முத்தானநாலாம்நாள்கடுந்தீயிட்டு...... .... *
முருக்கிலுப்பைசண்பகஞ்சம்பங்கிப்பூவே.....(௮)

பூவொடுபன்னீரும்மாதளையும்முல்லை ... . *
புங்கொடுங்காங்கிலவுபால்குறண்டிப்பூவும் ... ... *
பூவொடொருதிமிருபிடிவகைக்குச்சொன்னோம் ... *
பொன்னுனமருக்கொழுந்துபிடிதான்போடு..... *
பூவொடிவையாவையுமேம்பாட்டுக்கிண்டி...... ... *
போங்காமல்மெழுகுபதம்வருதல்கண்டு... ... ... *
காவொடுகையிட்டுமேகிண்டிப்பாரு...... .... *
கடுகுருண்டுமெழுகானால்அடுப்பையாற்றே ... (௯)

ஆற்றவேவடிக்கலசத்தன்னிலேகேள்.................. *
அணிகுங்குமப்பூகோரோசனைகஸ்தூரி . ... *
பார்த்துமேசாதிக்காய்செங்கழுநீர்கோஷ்டம் ... ... *
பச்சைகற்பூரமொடுபுனுகுதானும் ... . *
போற்றியேவகைக்குநாற்கழஞ்சிகொண்டு............ *
போத்துமேவடிக்கலசத்துள்ளேயிட்டு .... *
ஆற்றியேதயிலத்தைவடித்துவாங்கி......... .... *
ஐங்கரற்கும்அறுமுகற்கும்* பூசைபண்ணே ... (௰)

* பூஜாவிதி

ஐவக்குந்தயிலந்தனைப்பார்த்துவடி கொள்மெழுகுபதத்திறக்கிக்
ணைக்குஞ்சரனைகந்தனைவான்கவனநவநாதர்கள்தம்மை
உய்க்குஞ்சுழினைநடம்புரியுமுமையாதிருவாணியைப்பூசை
மெய்க்கும்விதியாற்பொரிகடலைவீறுபழம்தேங்காயொடுமே

காயாக்கரும்புஞ்சருக்கரையுங்கனிவாய்ப்பிளவும்வெற்றிலையும் *
ஆயாப்பூவுந்தக்ஷிணையும்ஆறிபகவற்கவையுஞ்செய்து.............. *
ஓபாக்குணமாமந்திரநூறுருவேசெபித்துஓமென்று...... ... *
மேபாகமத்தின்விதிப்படியேமெய்ம்மையதிற்பூஜைபண்ணே

3 பண்ணியேதயிலத்தைத்தாளிப்புடமிட்டு...... ...... *
பக்குவமாய்நாலுநாள்வட்டம்மூழ்கு................ *
நண்ணியேபசும்பயறுஞ்சேப்பங்காயாகும்....... ... ... *
நலமாகமூழ்குநாள்புளியைத்தள்ளு................ *
பண்ணையைமொழிபாளேபுகையிலேறு.............. *
பாலதபிரும்பச்சைசமாமிசமாகாது... .... *
திண்ணமாய்ப்பெண்ணோடுபலகாரங்கள்............ *
சேரவொன்றுமாகாதுதெரிந்துதள்ளே...... (௰௩)

பழங்கள் பூசினிக்காய் உளுந்து மொச்சை அறைக்கீரை குளிர்ந்தசலம் ஆகாது.

3 பத்தியம்.

மூழ்கிவரமண்டலத்திற்நோய்கள்தீரும்.............. *
முன்பின்இதும்போலிலைதயிலப்போக்கு...... ... *
வாழ்குவாய்வேதாந்தம்சித்தாந்தம்கொண்டும்... .... *
வளம்பானகிரந்தமுதல்தமிழும்பார்த்து... .. .. *
ஆள்குவாய்ஆயிரத்திருநூறுக்கும்......... ... . *
அப்பனேசூத்திரம்அறுநூற்றில்சொன்னேன் ... *
தாழ்வுதான்வாராதுசஞ்சீவியாகும்...... .... *
தகைமையுள்ளபத்தியந்தான்சாற்றக்கேளே ...... *

ஆகாதுதள்ளிவிட்டருந்தக்கேளு .... *
அவரைக்காய்சிறுகீரைமுருங்கைப்பிஞ்சு............ *
பாகானசிறுபயறுதுவரைநெய்பாம்.................... *
படர்கொடிக்கால்வழுதலையின்பிஞ்சுமாகும் ... *
வாகானகோழிஅண்டம்உடும்புகாடை...... .... *
வயல்பயறும்சுடுமீனுமாகும்சொன்னேன்.......... *
சாகாதகொழுத்தஇளையாங்கவுதாரி............ ...... *
சருக்கரையும்முசல்ஆகும்மிளகும்ஆமே .... *

பிளைகாகுஞ்சிரசமாங்கருவாய்ப்பட்டை .... *
வெத்தயமாம்சாதிக்காய்ஏலமாகும் .... *
பிளைகாகும்வெற்றிலையும்கிராம்புமாகும் .... *
பின்னையொன்றுமாகாதுசொல்லக்கேளு .... *
அளைகானதிவ்வளவுங்கூட்டிக்கொண்டு .... *
அப்பனேபுலத்தியனே அருமையாளா .... *
பளைகாகும்தயில்மத்துமூழ்கும்போது .... *
பருமாத்தம்வெந்நீரோபருகுவாயே .... *

௦ தள்ளிமறுநாள்கூட்டுதீருமவியாதி .... *
சாற்றக்கேளாய்தலைநோய்தொண்ணூற்றாறும் .... *
கொள்ளவேசயகாசம்பதினெண்குலை .... *
குலையெரிவோடஷ்டகுன்மமயக்கந்தூக்கம் .... *
வள்ளலேமேகமென்றதிருபத்தொன்றும் .... *
வாதபித்தசிலேத்துமத்தால்வந்தநோயும் .... *
மெள்ளவேஅஸ்திசுரம்அஸ்திவெட்டை .... *
மூலகாச்சல்கண்ணெரிவுவிட்டுப்போமே .. .. (௯௨)

போமேதானீசிரங்குசொரிகரப்பான்குஷ்டம் .... *
பொங்கிவருநீரிழிவுவிகடுப்பு .... *
போமேதானச்சுவலிமன்னடைகுத்தல் .... *
பொறிகலங்குந்தியிரோடுவாயுவெல்லாம் .... *
போமேதான்கண்ணோய்கள்தொண்ணூற்றாறும் .... *
போக்கரியபற்பலசண்டாளரோகம் .... *
போமென்றேசொல்லிவிட்டேன்சந்தனாதி .... *
புண்ணியஞ்செய்தவர்களிதைப்போற்றுவாரே. (௯௩)

௦ தீருமவியாதிகள்.

குற்றங்கள்வாராமல்தயிலமூழ்க .... *
குணங்கேட்கும்பண்டிதனேகூறக்கேளு .... *
பத்தியமாய்நாலுநாள்வட்டமுழுகு .... *
பச்சப்பயறுஞ்சீயக்காயும்வெந்நீராகும் .... *
வெற்றியடாதீருநோய்சொல்லக்கேளு .... *
மேகவெள்ளையிருபத்தொந்தாமெனங்கேபோச்சு .... *
சத்தியமாய்அஸ்திசுரம்அஸ்திவெட்டை .... *
சழங்கியமெய்யெரிவுகைகால்காந்தல்போமே ... *

சாந்தமெலாடுபித்தவாய்வூட்டினவாய்வோடு...... ......*
கண்ணெரிவுகிறுகிறுப்புமயக்கந்தூக்கம்;... ......*
வாந்திவாய்நீரூறல்மண்டைகுலை........ ......*
வறட்சியெடுகாமாலைபாண்டுசோகை... ....*
மூந்திவருமண்டையிடிமண்டைக்குத்து...... ... ..*
மூக்கில்நீர்ப்பாய்ச்சலொடுபீனிசங்கள்...... ......*
சாந்தியாம்கண்ணோவுகண்புகைச்சல்...... ... .*
காலசநிதையசநிசூலைவாய்வே ....*

வாய்வோடுசூலையெரிவுநீர்ச்சுறுக்கு.......... ......*
வாதபித்தசிலேற்பனத்தாலெழுந்தரோகம்... ......*
ஏயுமற்றையுள்ளநோய்வகைகளெல்லாம் ....*
இடிவிழுந்தபனைபோலஏங்கிப்போகும் .... *
காயாதுகண்ணொளியோகுளிர்ச்சியாகும் ... .*
கண்புகைச்சல்வெள்ளெழுத்துமாறிப்போகும் ...*
பாய்கின்றஅலைகடல்சூழ்உலகத்துள்ள... ....*
பற்பலவாகியநோய்கள்பறக்கும்பாரே...... ......*

○ பறக்குமடாமேகமிருபத்துநாலும் ....*
பரிவிருந்தமூலமுதல்பவுத்திரவாய்வும்...... ......*
அறக்குமடாகண்வாய்வுஅல்லிமேகம்............ ...*
அதிசாரக்கிரிச்சினம்பீனிசம்நீரோற்றம்...........*
துறக்குமடாகெட்டகண்ணுங்கபாலவாய்வும் ... .*
சூலைசயம்மந்தாரகாசமெட்டும்... ... ... *
நிறக்குமடாவெளுத்திருந்தவுடலிரத்தம்...... ... ...*
நிறைபித்தசோகையொடுநீங்கும்பாரே........... ..*

தயிலத்தின்அருமைபெருமை

கனகமொப்பாச்சரீரநிறங்காட்டுமேகராஜாங்கம்... ....*
எனலாந்தயிலமெலாநினைவ்வாந்தீர்க்குஞ்சந்தனாதி ....*
வினலாம்விளைக்கும்விஷமுட்டிவிண்டோம்நாலுதயிலம்அதில் *
அனலைபாத்துஞ்சந்தனாதிஅருமையுனாக்கஆர்வசமே... ....*

சிலகுறியீடுகளிட்டு 'அத்தயிலத்திலெழுதியிருக்கும் பாடல்களெல்லாம் வேறுசாத்திரங்களிலுள்ளவைகளென்று அறிக.

உ

அறிக்கை.

இந்தமகாசந்தனாதிதயிலம் பாகஞ்செய்து நிறைவேறியிருக்கிறபடியால் அரைபடி தயிலம்பிடித்த இங்கிலீசுபாட்டில்-க-இ-ரூபா-ய- ஆகவும் கால்படிபிடித்த பயின்ற்று-க-இ-ரூபா-ரு- ஆகவும் சென்னபட்டணம் வடமலைமேஸ்திரியார்வீதி-உக- வது-கதவிலக்கமுள்ள வையாவூர்-அருணாசலமுதலியார்கிருகத்திலிருக்கும்-இ.பண்டிதர் அப்பாதுரைமுதலியார் மூலமாகவிலைகொடுத்து வேண்டியவர்கள் வாங்கிக்கொள்ளலாம்.

தயிலம்வாங்கிக்கொள்ளப்பட்டவர்களுக்குப் பத்தியம்முதலியவிபரம் அறிந்துகொள்ளும்பொருட்டு, இப்புத்தகம் ஒன்று விலையில்லாமல்கொடுக்கப்படும்.

இங்ஙனம்,

பண்டிதர்கள்.

டாக்கர்சத்திரம் பி.ஆண்டியப்பகிராமணியார்.

தி. படேமீராசாகிபு.

இரும்புலியூர் - நாராயணசாமிமுதலியார்.

இங்கிலீஷ் டாக்டர்

திருவிளம்பூதூர் - அண்ணாமலைமுதலியார்.

நெல்லிக்காகிர்தமுற்பா.

சகலருக்கும் முழுநெல்லிக்காயாகச் சாப்பிடத்தக்க அவிழ்தம் இதுகுணஞ்செய்யப்பட்ட விவரம் பித்தமென்பதுநாற்பதும் தனித்த இரத்தமூலச்சூடும் நீர்ச்சுருக்கு நீரருசல் கொதிப்பு வெப்பு அழலை ஆக்கிருஷிம் கைகால்நடுக்கல் இவைகளெல்லாந்தணிக்கும்.

பித்தமனலையப்பிநசம்வாய்நீர்வாந்தி........................*
மத்தமலக்கட்டும்மயக்சமுமில்—ஒத்தவுரு...... ....*
வில்லிக்காயம்மருங்காமெந்நாட்காலந்தேர்ந்தே...... ....*
நெல்லிக்காயம்மருந்துநீயுண்........... ... .*

உருவில்லிக்காயம்மருங்காம்- மன்மதன் சரீரத்தினுடைய அழகுண்டாம் எந்நாட்காலம் - பகற்காலத்தை-தேர்ந்து - அறிந்து-நெல்லிக்காய்-நெல்லிக்காயாகிய மருந்து அமுர்தத்தை -உண்ணீ-உண்ணு.

நெல்லிக்காய்க்குப்பித்தம்நீங்குமதன்புளிப்பால்... ....*
செல்லுமேவாதமதிற்சேர்துவரால்—சொல்லும்ஐயம்... ... ...*
ஓடுமினிதைச்சித்தத்தில்உன்னஅனலுடனே......... ....*
கூடுமிறமேகமும்போங்கூறு................ ....*

பத்தியம்.

கடுகு-நல்லெண்ணெய்-புகையிலை-சுருட்டு -இவைநீக்கவேண்டியது.

நெல்லிக்காய் ஆமலகம் பாகஞ்செய்து நிறைவேறியிருக்கின்றது இதுகளில் பெரியகாய் -ரூபா-௧ இ ௩௨- ஆ-ம்-சிறியகாய் - ரூபா-௧ இ ௩௪ ஆ-ம்-வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்படும்.

உ

திருகரணபுராதிசுத்தி பரங்கிப்பட்டை ரசாயனம்

இதுகுணஞ்செய்யத்தக்கவிவரம் ஆனந்தவாய்வு தாதுவிர்த்தி உபி த்தவாய்வு-பிடிப்புசூலைவாய்வென்பது இருபத்தாறும் மேகம் இருபதும் கருங்கிரந்தி-செங்கிரந்தி சூலைபதினெட்டும் வாதம்எ ண்பத்துநாலும் ஒட்டியசிரங்கும் அறும் ஓது.

தாகம்பலவாகந்தாதுநஷ்டம்புண்பிளவை........ .... *
மேகங்கடிகிரந்திவிழ்மூலந்...தேகமுடங் .... *
குட்டைபகந்தரமேற்கொள்வமனம்போம்பறங்கிப்................ *
பட்டையிணையுச்சரித்துநீரிழிவுபோம்பார்................ *

திருகரணபுராதிசித்தி பறங்கிப்பட்டை ரசாயனம்காலையில் பலம்-ஹ-மாலையில்-பலம்-ஹ பிரமாணம் ஒருமண்டலம் சாப்பிடவேண்டியது ஸ்நானம் க்ஷவரம்செய்துகொள்ளுகிறதினத்தில் மருந்துநீக்கவேண்டும் இதல்லாமல் பெண் நீக்கவேண்டியது சாப்பிடுகிறவஸ்துவில் யாதொருபத்தியமில்லை தனக்கிஷ்டமான பதார்த்தங்கள் சாப்பிடலாம் இதுசேர்-க-இ-ரூபா [illegible]-அ கொடுக்கப்படும். இது சகலருக்கும் உபயோகமாகும்.

உ

சுப்பிரமணியர் துணை.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் டா
க்கர் சத்திரத்தில் மகாகனம்பொருந்திய மகா-ள-ள-ஸ்ரீ.
பண்டிதர் பி. ஆண்டியப்பகிராமணி என்பவர் சிறுகுழந்
தைகளுக்கும் பெரியவர்களுக்கும் சகலவிதமான வி
யாதியிருந்தபோதிலும் அவர்பார்க்கவல்ல்வர் யாவருக்கு
ம்நல்லவர் கைபாகம் செய்பாகம் தெரிந்தவர் வயித்திய
ஞ்செவ்வையாய் அறிந்தவர் அப்படிப்பட்ட புண்ணிய
வானால் அனேகருக்குச் சகலவிதமான வியாதிகளும் சொ
ஸ்தமாயிருக்கின்றது வியாதியுள்ளவர்கள் அந்த புண்ணி
ய ஆத்மாவைக்கண்டு தங்கள் தங்கள் வியாதிகளைச் சொஸ்
தப்படுத்திக் கொள்ளலாம்.